புதுமலர்: 07 இதழ்: 05

புரட்டாதி - ஐப்பசி

# அனல்

இணை ஆசிரியர்கள்

யோ.நிக்ஷன்

வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்

ஆவியிலே அனலாயிருங்கள்

கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

- ரோமர் 12:11 -

சீயோன் தேவாலயப் பிரசுரம்

ZION CHURCH PUBLICATION

01.09.2010

## பொருளடக்கம்


* அனலின் குரல்
* கதையும் கற்றதும் - பெரிதான சிலாக்கியம்
* வினா விடை - 41
* யார் என்னை விடுதலையாக்குவார்?
* இரத்தம் சிந்திய இரத்தவராலாற்றுச் சத்தங்கள்
* வாலிபர் வளாகம் - தினாளின் தீர்மானம்
* குறுக்கெழுத்துப்போட்டி - 39
* நற்செய்தி - கிரயமில்லா நேசம்
* பக்தர்களின் பயிலகம்
* வித்திடும் வித்தகர்கள்
* மூவரி முத்துக்கள்
* தேவனுடனான உறவுக்கான அனலின் அழைப்பு


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

*ஆசிரியர் "அனல்",*
*347 நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம். இலங்கை.*

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


---

*திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11*

# அனலின் குரல்



இயேசு கிறிஸ்துவிற்குள் அன்பான உள்ளங்களே! இவ் வருடத்தில் இந்த ஐந்தாவது அனலின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இயேசு கிறிஸ்து பாவிகளாகிய எம்மை நேசித்து எம் பாவங்களைப் போக்கும் ஜீவபலியாக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து, தம்மை விசுவாசிக்கும் ஒவ்வொருவருக்கும் பாவ மன்னிப்பையும் விடுதலையையும் கொடுத்து தம் பிள்ளைகளாய் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கின்றார்.

நித்திய சந்தோஷத்தை வாஞ்சிக்கும் அருமையான சகோதரனே, சகோதரியே இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவர் காட்டிய வழியில் நடவுங்கள். அவரை பின்பற்றுவதில் கவனமாக இருங்கள். தொடர்ச்சியாக அவரைப் பின்பற்றுங்கள்.

வேதாகமத்திலே எலியாவை எலிசா தொடர்ந்து பின்பற்றிச் சென்றான். தடைகள் வந்த போதும் அவைகளைப் பொருட்படுத்தாது பின்பற்றினான். இறுதியில் எலியாவே கேட்டான. "நான் உனக்குச் செய்ய வேண்டியது என்ன, கேள்" என்றான். தொடர்ச்சியாக பின்பற்றிச் சென்ற போது எலிசாவின் தேவையின் பக்கமாய் எலியா செயலாற்றத் தொடங்கினான்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நீங்கள் தொடர்ந்து பின்பற்றுங்கள். அப்போது உங்களுடைய விருப்பங்களை நிறைவேற்றுவார். உங்கள் தேவைகளைச் சந்திப்பார். வியாதிகளைக் குணமாக்குவார்.

"கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக."


— ஆசிரியர் —




## பெரிதான சிலாக்கியம்

ஒருமுறை செல்வந்தன் ஒருவன் வீதி வழியாக சென்று கொண்டிருந்தான். திடீரென அவனது பார்வையில் ஒரு மனிதன் தென்பட்டான். மிகவும் களைத்துப்போய் சோர்வுற்றவனாக அவன் இருந்தான். அந்த வீதியோரமே அவனது வீடாக இருந்தது. அவனுக்கென்று சொல்லிக்கொள்ள அவனிடம் எதுவுமே இருக்கவில்லை. அவனைக் கண்டதும் அந்த செல்வந்தனது மனதிலே ஏதோவொன்று நிழலாடியது. அவனை எங்கோ பார்த்த ஒரு நினைவு. எனவே அந்த செல்வந்தன் நின்று "அவனைப் பார்த்து" **நண்பனே! எனக்கு உன்னை எங்கோ பார்த்தது போல் ஒரு ஞாபகம். உனக்கு என்னைத் தெரியுமா?"** என்று கேட்டான். அந்த ஏழை மனிதன் இதை சற்றும் எதிர்பார்க்கவேயில்லை. இருந்தபோதும் அவன் அந்த செல்வந்தனது முகத்தை கூர்ந்து பார்த்தான்.

திடீரென அவனது முகம் மலர்ந்தது. **"நண்பனே! உனக்கு என்னைத் தெரியவில்லையா? பாடசாலையிலே நாம் ஒன்றாக கல்வி கற்றோமே?. எப்போதுமே உனக்கு அருகிலே உட்கார்ந்திருக்கும் அந்த பழைய நண்பன் தான் நான்"** என்று அவன் கூறினான். அந்தக் கணமே இருவரின் மனதினுள்ளேயும் அந்தப் பழைய நட்பின் நினைவுகள் தோன்றின.



தனது நண்பன் வாழ்க்கையிலே பெரும் துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவித்ததை அறிந்த அந்த செல்வந்த நண்பன் மனம் உடைந்து போனான். அவனது இத்தனைக் கால போராட்டத்திலே தன்னால் அவனுக்கு உதவ முடியவில்லையே என்று மனம் கலங்கினான். அவனுக்கு ஏதாகிலும் செய்யவேண்டும் எனத் தீர்மானித்தவன் உடனே பையிலிருந்து தனது காசோலைப் புத்தகத்தை எடுத்தான். ஒரு பெருந்தொகைப் பணத்தை அதிலே குறிப்பிட்டு அதை அவனது கையிலே கொடுத்து **"இங்கே பார். தயவுசெய்து இதை ஏற்றுக்கொள். நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும். இன்றிலிருந்து ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பித்துக்கொள். அதற்கு இது உனக்கு உதவியாக இருக்கும். நீ**

**எதைக் குறித்தும் கவலைப்படாதே. உனக்காக நான் இருக்கிறேன்"** என்று கூறி அவனைக் கட்டியணைத்து உற்சாகப்படுத்திவிட்டு சென்றான்.

அடுத்த நாள் அந்த செல்வந்தன் மீண்டும் அந்த வழியாக வர நேரிட்டது. அப்போது அவன் கண்ட காட்சி அவனை அதிரவைத்தது. மீண்டும் அதே பழைய இடத்தில் அதே கோலத்தில் அவனது நண்பன் இருந்தான். ஏக்கத்துடன் அவனிடம் சென்று விசாரித்தான். அதற்கு அந்த ஏழை மனிதன **"நண்பனே! நீ தந்த காசோலையுடன் நான் வங்கிக்குச் சென்றேன். ஆனால் அங்கு காணப்பட்ட ஜனங்களை பார்த்தேன். அவர்களுடன் என்னுடைய நிலையை ஒப்பிட்டுப் பார்த்தேன். நான் சென்றால் அவர்கள் என்னை ஒரு பொருட்டாகவே எண்ணமாட்டார்கள். அத்தோடு இவ்வளவு பெருந்தொகை பணம் குறிக்கப்பட்ட காசோலையை நான் எடுத்துச் சென்றால் அவர்கள் நிச்சயம் என்னை சந்தேகப்படுவார்கள். நான் களவு செய்வதாக நிச்சயம் நினைப்பார்கள். எனவே நான் திரும்பி வந்துவிட்டேன்"** என்று கவலையுடன் கூறினான்.

அந்த செல்வந்தன் அவனைப் பார்த்து சிரித்துவிட்டு அவனை அணைத்துக்கொண்டு **"நண்பனே. இந்தக் காசோலையை பெறுமதி மிக்கதாக மாற்றுவது உன்னுடைய உடையோ தோற்றமோ அல்ல. அதிலே குறிப்பிடப்பட்டுள்ள என்னுடைய கையொப்பம் தான். எனவே தாமதியாதே! செல்!!"** என்று கூறினான்.

**இதேபோன்று தான் நாம் தேவனிடம் செல்வதற்கு எமக்கு வழியுண்டாக்குவது எமது தகுதியல்ல. நாம் இருக்கும் நிலையும் அல்ல. அதற்கு மாறாக இயேசு கிறிஸ்து எமக்காக இரத்தம் சிந்தி இரட்சிப்பை அளித்ததன் மூலம் எம் வாழ்க்கையின் மேல் இடப்பட்டுள்ள அவரது கையொப்பம் தான். இதுவே இரட்சிப்பின் மூலம் எமக்கு கிடைத்த மகா பெரிய பரிசு. இவ்வளவு சிலாக்கியம் பெற்ற நாம் எதற்காக கவலைப் படவேண்டும்? நாம் எமது வாழ்க்கையை எப்போது தேவனிடம் ஒப்புக்கொடுக் கின்றோமோ அந்தக் கணமே தேவன் எம் வாழ்க்கையை முற்றிலுமாக ஏற்றுக்கொள் வார். வாழ்வு வளம் பெற செய்வார்.**

**கெ. இன்பரூபன்**

## வினாவிடை - 41

01. இங்கே எல்லா மனுஷரின் முடிவும் காணப்படும் எங்கே?
02. இயேசுவின் அற்புதங்கள் எத்தனை?
03. மனுஷருக்கேற்ற புத்தி எனக்கில்லை என்றது யார்?
04. எந்த மனுஷனை கர்த்தர் அருவருக்கிறார்?
05. புல் இருக்கும் இடத்தில் காட்டுக்கழுதை கத்துமோ என்றது யார்?
06. மழையில்லாத மேகங்களைப் போல இருப்பவர்கள் யார்?
07. ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரத்தை எந்த நூலினால் செய்தார்கள்?
08. யாரால் ஒரு துண்டு அப்பத்துக்கும் இரக்க வேண்டியிருக்கும்?
09. கர்த்தர் யாருக்கு நல்லவர்?
10. இருதயம் எதனால் சீர்படும்?

# யார் என்னை விடுதலையாக்குவார்?

உலகம் எங்கிலும் வாழ்கின்ற மக்கள் கூட்டங்கள் தாங்கள் விடுதலையற்று இன்னொரு ஆட்சியாளரினால் ஆளப்படுவதை ஒருபோதும் விரும்புவது இல்லை. சுதந்திரம் பெற்ற இந்தியாவில் சிறகடிக்க துடித்த கவிஞர் பாரதி விடுதலையை காணமுன்னரே கண் மூடிப்போனார். அவ்வாறு மறைந்ததும் நல்லது தான். வெள்ளையர்கள்



கரங்களில் இருந்து விடுதலை பெற்றால் வானமெல்லாம் சொந்தமாகும் எனக் கனவு கண்டு இருந்த அவர் சுதந்திர இந்தியாவின் கொள்ளையர்களின் அராஜகத்தின் முன் இருதயம் வெடித்தே செத்துப்போயிருப்பார்.

**விடுதலையும் சுதந்திரமும் இவ்வுலகில் வெறும் கற்பனைக் கனவுகளே...... பாவச்சிறையில் அகப்பட்டுப் போன மனிதனால் எதையும் சுதந்திரமாகச் செய்ய முடிவதில்லை.**

இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தால் பாவச்சிறையிலிருந்து விடுதலையாகும் மனிதனைப் போல சுதந்திரம் அனுபவிக்க வாய்ப்புள்ள எவரும் உலகிலிருக்க முடியாது.

விடுதலையை வாஞ்சிப்பாயா? தாவீதின் இரங்கல்: ***சங்கீதம் 39:8 என் மீறுதல்கள் எல்லாவற்றிலுமிருந்து என்னை விடுதலை யாக்கும்.*** மெய்யான விடுதலை வேண்டுகின்ற ஒரு மனிதன் அதை தேவனிடமே கேட்டுப்பெற்றுக் கொள்ளுவான். அவர் மெய்யாகவே விடுதலை அருளுவார். சத்தியம் உங்களை விடுதலையாக்கும். (யோவான் 8:32)



**உண்மையான விடுதலைக்கான ஒரே வழி சத்தியமாகிய தேவவசனத்தை நம்பி விசுவாசித்து கீழ்ப்படிவதாகும்.**

வியாதியினாலும், கடன் தொல்லையினாலும் பலவிதமான மீளமுடியாத குழப்ப நிலையிலும் பாவ அடிமைத் தனத்திலுமிருந்து வெளியே வரமுடியாமல் பல முயற்சிகள் செய்தும் நொந்துபோய் இருக்கின்றாயா?

***ஒரு நல்ல செய்தி. எப்பேற்பட்ட பாவியையும், நிர்ப்பந்தமான மனுஷனையும் விடுதலையாக்க இயேசு கிறிஸ்து எப்போதும் ஆயத்தமாய் இருக்கிறார். அவரண்டை வந்து அவர் தரும் விடுதலையைப் பெற்று அவருக்கு சாட்சியாக ஜீவிப்பாயா?***

**இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார் (எபிரெயர் 13:8)**

ரேமா

# இரத்தம் சிந்திய இரத்த வரலாற்றுச் சுத்தாங்கள்

நான் பணியப்போவதில்லை - பர்தொலொமேயு

உலகத்திலுள்ள சகல ஆஸ்திகளிலும் கனத்திலும் மேலாக
நான் என் இயேசுவை நேசிக்கிறேன் - ஜெனோபியஸ்

இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் மட்டுமே
மனுக்குலத்திற்கு மீட்பு உண்டு - மௌரா

மரணத்தை சந்திக்கவே விரும்புகின்றேன்.
அதுவே என் தைரியம் - யூப்பிலியஸ்

ஆண்டவரே இந்தக் கொடிய வேதனைகளைச்
சகிக்க எனக்கு கிருபை தாரும் - விக்டர்

*(கற்களை நொறுக்கித் தூளாக்கும் இயந்திரத்திற்குள் போட்டனர். உருத்தெரியாமல் தூளாகிப்போனர்)*

என் அன்பின் இயேசு இதயத்தில் வாழ்வதால் என் இருதயம்
துண்டு துண்டாக வெட்டப்பட்டாலும் ஒவ்வொரு துண்டிலும்
இயேசுவின் பெயர் இருக்கும் - இக்னேசியஸ்

உங்களைத் திருப்திப்படுத்த விரும்பினால் நான் எப்படி என் தேவனைச்
சந்திப்பேன்? நான் போதித்த ஆயிரமாயிரம் மக்களை நான் எப்படி
சந்திப்பேன். அவர்களுடைய இரட்சிப்புக்கு முன்னால் என் சரீரம் ஒரு
பொருட்டல்ல. — ஜான்ஹஸ்

என்னைத் துண்டு துண்டாக கிழித்துப் போடுங்கள். என்
ஆத்துமாவையும் உங்களால் கூடுமானால் பிளந்து பாருங்கள்.
எதைச் செய்தாலும் இயேசுவை மறுதலிக்கும் வார்த்தைகள் என்
வாயில் இருந்து வரவே வராது. — மைக்கல் நாகஷிமா

*(சாகும் வரை கொதி தண்ணீர் ஊற்றியே கொன்றனர்).*




**கிறிஸ்துவுக்குள் என் அன்பின் வாழ்த்துக்கள்**

நல்ல குடும்பத்தில் செல்லப்பிள்ளையாக எல்லாருடைய அன்பிற்கும் பாத்திரமுள்ளவளாகவும் ஆவிக்குரிய நல்ல பெற்றோரையும் சகோதரர்களையும் உடைய குடும்பத்தில் பிறந்து வளர்ந்த தீனாள் புதிதாக போன ஊரிலும் புதினம் பார்க்க ஆவல் கொண்டவளாய் புறப்படத்தீர்மானித்தாள். கூடவே வெளியே சென்றும்விட்டாள்.

ஒரு குமாரன் தன் கையில் கிடைத்த ஆயிரம் ரூபாய் தாள் காசைத் தூக்கி எறிந்து விட்டு பளபளப்பான பேப்பரை மடித்து வைத்துக் கொண்டான். ஏனென்றால் அந்தப் பேப்பர் தான் தொடுவதற்கு வழவழப்பாகவும் அவனுக்குப் பிரியமாயும் தென்பட்டது.

அவன் குருடனாய் இருந்தபடியால் **"உண்மையான மதிப்பிற்கு"** உணர்வு அற்றவனாக இருந்தான்.

அது போலவே இரண்டு வயது குழந்தை நூறு ரூபா தாளை உதறிவிட்டு ஓர் மலிவான பொம்மையை எடுத்துக் கொள்ளுகின்றது. இந்தக் குழந்தையும் **"உண்மையான மதிப்பை குறித்து"** அறியாமல் இருக்கின்றது. ஏனென்றால் குழந்தைக்கு வளர்ச்சி இருப்பது இல்லை.

**வாலிபத்தைச் சிதைப்பதற்கு முக்கியமான மூன்று காரியங்கள்.**

**01. குருடான நிலைமையில் எடுக்கும் தீர்மானங்கள்.**

பிறப்பின் மூலம் நீ ஒருவேளை குருடான நிலையில் இல்லாமல் இருக்கலாம். ஆனால் உன்னுடைய வாலிபத்தின் நிலையில் (துடிப்பில்) நீ

குருடாக்கப்பட்டு (எதையாவது செய்வதற்கு மோகம் கொண்டு சடுதியாக) எடுக்கும் தீர்மானங்கள் உன்னை சிதைத்துவிடும். **பொறுமையும், தாழ்மையும், தேவவசனத்துக்காக காத்திருத்தலும், தொடர்ச்சியான ஜெப ஜீவியமும், பரிசுத்த ஆவியின் நிரப்புதலுக்காக வாஞ்சிப்பதும் உன்னை பார்வையடைச் செய்வது மாத்திரமல்ல, உயர்ந்த இலட்சியங்களை அடைவதற்கும் உன்னதமான தேவனுக்கு மகிமை கொண்டுவரும் தீர்மானங்களை எடுப்பதற்கும் உன்னை வழிநடத்தும்.**

**ஜெபம்: அன்பான இயேசுவே, உம்முடைய வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும். ஆமென்**

## 02. வளர்ச்சி இல்லாத நிலையில் எடுக்கும் முடிவுகள் (தீர்மானங்கள்)

குழந்தையாய் இருந்த போது குழந்தையைப் போல பேசினேன். குழந்தையைப் போல சிந்தித்தேன். குழந்தையைப் போல பேசினேன். புருஷனானபோதோ/ஸ்திரியான போதோ இளமைப்பருவத்தை (வாலிபத்தை) அடைந்ததும் குழந்தைத்தனமான காரியங்களையும், குழந்தைத்தனமாக தீர்மானங்கள் எடுத்தல் எல்லாவற்றையும் ஒழித்துவிட்டேன்.

**திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாக இருக்கின்றாயா? வளரும்படி (1பேதுரு 2:3)**

நீ வளரவேண்டியது மிகமிக அவசியம். என் சகோதரனே, சகோதரியே! காரணம்: ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிப்பதற்கு வளர்ச்சி மிகமிக அவசியம். தீர்மானிப்பாயா? கிறிஸ்துவுக்குள் வளருவதற்கு.

**ஜெபம்: கிருபையுள்ள இயேசுவே உமக்குள்ளாக நான் இன்னும் வளர்ந்து வேர் விட எனக்கு உதவி செய்தருளும். ஆமென்.**

## 03. கோபமான நிலையில் எடுக்கும் தீர்மானங்கள்.

உன்னுடைய வாழ்க்கையில், எழும்புகின்ற காரணமில்லாத, நியாயமில்லாத, தேவ நாமத்திற்கு மகிமையைக் கொண்டுவராத கோப நிலையில் நீ தீர்மானங்களை முன் வைப்பாயானால் வாழ்க்கையின் பெலன் இழந்து சலிப்படைந்து முடங்கிப் போய்விடுவாய்.

***நீ விரும்பும் காரியத்தை வேதம் அங்கீகரிக்காகவிட்டால் கோபம் கொள்ளாதே. முறுமுறுக்காதே, முணுமுணுக்காதே,*** கோபத்தோடே ஒரு நபருக்கு விரோதமாகவோ அல்லது குழப்பங்களுக்கு எதிராகவோ அல்லது உனக்கு எதிராகவோ தீர்மானிக்காதே. (செயல்படாதே).

சத்திய வேதத்தில் கோபத்தோடு தீர்மானங்களை எடுத்தவர்களின் நிலை பரிதாபமானது.

காயின் தன் சொந்த சகோதரனையே கொலை செய்தான். யூதாஸ் காரியோத்து இயேசுவைக் காட்டிக்கொடுத்தான். இப்போது இயேசுவின் எதிரிகளிடம் உண்மையை சொன்னபோது அவர்கள் அதை அங்கீகரிக்காத நிலையில் உடனடியாகவே இயேசுவண்டை வரத் தீர்மானிக்காமல், கோபத்துடனும் துரோக உணர்வினாலும் உடனடியாக நாண்டு கொண்டு செத்தான்.

**ஜெபம்: கிருபையுள்ள பிதாவே என் வாழ்நாட்கள் முழுமையும் கோபப்படாமல் உம் வசனத்தின்படி தீர்மானங்கள் எடுக்க அருள்புரியும். ஆமென்.**

தீனாளின் தேசம்பார்க்கும் சுற்றுப்பயணம் ஓர் பெரிய ஆபத்தில் முடிந்தது. ஒரு நல்ல செல்வந்த தந்தையின் ஒரே பெண் சுதந்திர அலைச்சலில் சின்னாபின்னமானாள். **இது உனக்கு ஓர் எச்சரிக்கை.**

தீனாளின் பார்வையில் ஒரு வேளை சிறிய காரியமாகத் தோன்றியிருக்கலாம். தேசத்தை சுற்றிப்பார்ப்பது அது அவளின் வாழ்க்கையையே கண்ணீராக மாற்றிவிட்டது. தீனாளின் முழுக்குடும்பத்தையும் பாதித்தது. ஒரு கிராமமே இரத்த வெள்ளமாய் மாறிற்று. எத்தனையோ பெண்களை விதவைகளாக மாற்றியது. ஒன்றுமறியாத அப்பாவிகள் கூட மரித்திருப்பார்கள். இறுதியாக அவளுடைய வாழ்வும் சிதைந்து ஒன்றுக்கும் உதவாமல் போனது.

இப்படியெல்லாம் வரும் என்று கொஞ்சம் கூட தீனாள் எண்ணியிருக்க மாட்டாள். பிரியமானவர்களே, வேதத்திலுள்ள ஒவ்வொரு காரியத்திலும் நீ இந்த பூமியில் இயேசுவின் பிள்ளையாக வாழ்வதற்கு எழுதப்பட்டுள்ளது. சத்திய வேதத்தை நேசித்து, வாசித்து, தியானித்து அதன்படி நடக்க உன்னை ஒப்புக்கொடுப்பாயா?

அனேகருடைய வாலிப வயதின் தீர்மானங்கள், அவர்கள் எதிர்காலம் முழுமைக்கும் தாங்களாகவே தங்களுக்கு மண் போட்டது போல் மாறி ஓலமிட்டுக்கொண்டிருப்பதை அன்றாடம் நடைமுறை வாழக்கையிலும், வேதாகமத்தின் பக்கங்களிலும் பேசப்படுகின்றது.

***வாலிபரே தடம்புரளாதீர், உங்களை தாழ்த்தி தேவவசன அங்கிகாரத்துக்கு அமைய தீர்மாணங்களை எடுங்கள்.***

மற்றவர்கள் (உலகத்தார்) கிறிஸ்துவை அறியாதவர்கள், அறிந்தும் ஆடம்பரமாய் உல்லாசமாய் வாழ்க்கை வாழ விரும்புகிறவர்கள் போலவும் தீர்மானிக்காதீர்கள். முடிவு பரிதாபமானது.

***தீர்மானிக்க சில:......***

- **இடுக்கமான வாசல் வழியாய் பிரவேசிக்க தீர்மானி (மத்தேயு 7:13−14)**
- **ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருக்க தீர்மானி (கொலோசெயர் 3:9)**

- பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட தீர்மானி (கொலோசெயர் 3:9)
- பொருளாசையை விட்டுவிட தீர்மானி (கொலோசெயர் 3:5)
- பூமியிலுள்ளவைகளை அல்ல மேலானவைகளை நாட தீர்மானி (கொலோசெயர் 3:2)
- பக்தி விருத்தியுண்டாக பாட்டுப்பாட தீர்மானி (கொலோசெயர் 3:16)
- வேசித்தனத்திற்கு விலகி ஓட தீர்மானி (1கொரிந்தியர் 6:18)

இறுதியாக வேதம் தீனாளுக்கு கொடுக்கும் பெயர் "வேசியைப் போல" அவளுடைய சொந்த சகோதரர் தங்களது அருமை சகோதரிக்காக எதையும் செய்ய முடியாத நிலையில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவண்ணமாக நிற்கின்றனர். காரணம்: அவளது திமிர்பிடித்த தீர்மானத்தால் தீட்டுப்பட்டாள்.

**இன்று உன்னை இயேசு அழைக்கிறார். அவருக்குள்ளாக வருவாயா?**

நீ தற்போது எடுத்திருக்கும் தீர்மானங்கள் தேவனுக்கும் உனக்கும் சீரானவையாக உள்ளதா? அவரை இன்னும் நெருங்க உதவுகின்றதா? ஆராய்ந்துபார்.

**ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகின்றது. (யோவான் 9:4)**



கிறிஸ்துவுக்குள் அன்பான
*வேதநாயகம் சுமணன்*

## குறுக்கெழுத்துப் போட்டி - 38
## சரியான பதில் எழுதியவர்கள்

01. தி.ஜெகா - மயிலங்காடு
02. இ.எப்சிபா - பள்ளிக்குடா
03. இ.கனொருவி - பள்ளிக்குடா
04. சி.தங்கமணி - மீசாலை
05. பா.தர்சினி - காரைநகர்
06. எஸ்.மார்கிரட் - மீசாலை
07. எஸ்.சனோஜா - மீசாலை
08. ம.டயானி - பாண்டவெட்டை
09. றி.சிவாஜினி - காரைநகர்
10. ச.நாகேஸ்வரி - காரைநகர்
11. பா.கோமதி - காரைநகர்
12. உ.ரஜீவன் - காரைநகர்
13. பா.வதனி - காரைநகர்
14. பா.டிலானி - காரைநகர்
15. பா.மோகனதாஸ் - காரைநகர்



# குறுக்கெழுத்துப்போட்டி – 39

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | 2 | | 3 |
| | 4 | | | 5 | | | 6 |
| | | 7 | | | | | |
| | | | 8 | | | | |
| | | 9 | | | | | |



## இடமிருந்து வலமாக

01. தேவன் அனைத்தையும் செய்யும் இது உள்ளவர்.
04. இவர்களுக்கு இரங்குபவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான்.
08. ........... அனேகர் என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே ........... என்பார்கள்.

## வலமிருந்து இடமாக

02. நானே இதுவென இயேசு சொன்னார்.
09. ஆழத்தின் மேல் இது இருந்தது.
06. சகேயு இதை வசூலிப்பவன்.

## மேலிருந்து கீழாக

01. இங்கே தள்ளிக்கொண்டு போய் மீன் பிடிக்கும்படி வலைகளைப் போடுங்கள் என்றார்.
05. இப்படி இருந்த போது இப்படிப் பேசினான்.
03. ............ நிலைத்திருக்கிற எவனும் பாவம் செய்வதில்லை.

## கீழிருந்து மேலாக

07. கறை திரை ............. மணவாட்டி சபை.
05. திராட்சை தோட்டங்களைக் கெடுக்கும் ........... நரி.
02. நாம் கிறிஸ்துவுக்குள் பெலப்பட தேவனுடைய வசனத்தில் இப்படி ............. வேண்டும்.

# கிரயமில்லா நேசம்

**நற் செய்திப் பகுதி**

இரண்டாம் உலகப் போர் வெகுமும்முரமாக நடந்து கொண்டிருந்தது. நாசி கட்சியினர் சென்ற இடமெல்லாம் வெற்றி பெற்றுக் கொண்டிருந்தனர். அவர்களது கொடுங்கோல் ஆட்சியில் மக்கள் சிக்குண்டு தவித்தனர். குறிப்பாக யூதர்கள் சொல்லொண்ணாத் துயரத்திற்கு ஆளாயினர். பல்லாயிரக் கணக்கான யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அந்த நாட்களில் டென்பூம் என்னும் குடும்பத்தினர் ஹாலந்து நாட்டில் வசித்தனர். தெய்வப்பற்று மிக்க அந்த இல்லத்தார் கிறிஸ்துவுக்கு நல்ல சாட்சிகளாக விளங்கினர். யூத மக்கள் நாசி கூட்டத்தாரிடம் சிக்குண்டு அல்லல்படுவதைக் கண்டுஅவர்கள்உள்ளம்உருகினர். தங்களுடைய இல்லத்தை யூதர்களுக்கு புகலிடமாகத் திறந்து கொடுத்தனர். ஆனால் அது எளியதொரு செயலன்று.

யூதர்களுக்குப் புகலிடம் கொடுப்பது சட்டப்படி குற்றம் என்று அரசு அறிவித்திருந்தது. அதுமட்டுமல்ல அவ்வாறு புகலிடம் தருவோர்பிடிபட்டால்யூதர்கள்அடைக்கப்படும் சித்திரவதைக்கூடத்திலே அவர்களும் அடைக்கப்படுவார்கள். தாங்கொண்ணா வேதனை, சொல்லக்கூடாத பாடுகள் ஆகியவற்றை அனுபவிக்க வேண்டியதாயிருக்கும். அங்கு சென்றவர்கள் திரும்பி வருவதில்லை. மரணமே அவர்களது முடிவு.

**டென் பூம் இல்லத்தில் பல யூதர்கள் நீண்ட காலமாகப் பாதுகாப்பைப் பெற்றனர். கிறிஸ்துவின் அன்பை யூத மக்களுக்குக் காட்டியருளின அந்தக் குடும்பமும் ஒருநாள் கொடுங்கோலிடம்சிக்குண்டது. திருவாளர் டென் பூம், அவருடைய குமாரத் திகள் கூரி மற்றும் பெட்சி ஆகிய மூவரும் ரேவரன்ஸ் பிரக் என்னுமிடத்தில் இருந்த கைதிகளின் முகாமிற்கு கொண்டு போகப்பட்டனர்.**

சித்ரவதைக் கூடத்தில் நடந்த கொடுமைகளை வாயினால் விவரிக்க முடியாது. அந்த மனிதர்களுக்கு இரக்கம் என்றால் என்னவென்று தெரியாது. அவ்வப்போது வெளிப்படும் அவர்களது காட்டுமிராண்டித்தனத்தை அளவிட முடியாது. திருவாளர்டென்பூம்அங்கே மடிந்தார். சகோதரி பெட்சியும்தாங்கமுடியாதகொடுமைக்குள்ளாகி அந்தக் கூடத்திலேயே மரித்தார். தந்தையும் சகோதரியையும் இழந்தகூரி சொல்சொல்லண்ணா வேதனைகளுக்குட்பட்டவராகத்தவித்தார். எதிர்பாராதவிதமாகப் போர் முடிவடைந்து விட்டது. நாசி அரசு படுதோல்வி அடைந்தது. இறுதியில் கூரி அந்தக் கூடத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்.

போர்முடிந்து அண்டை நாடுகளுக்குள்ளாகஅமைதிநிலவியது.கூரிஜெர்மனிக்குப் பயணம் மேற்கொண்டார். அங்கே ஓர் இரவு, கிறிஸ்தவ ஆலயம் ஒன்றின் கீழ்தளத்தில் அவர் பேசுவதற்கென்று கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அங்கேகிறிஸ்துவின் அன்பைப் பற்றி கூரி பேசினார். தொடர்ந்து இயேசு கிறிஸ்து அருளும் மன்னிப்பைப் பற்றியும் பேசினார். **நம்முடைய பாவங்களை அவரிடம் அறிக்கை செய்வோமென்றால் அவற்றை மன்னிக்க அவர் தயை உடையவராக இருக்கிறார். அப் பாவங்களை**

அவர் ஆழ்கடலில் **முழ்கடித்து விடுகிறார். மேலும் இங்கே எதையும் தேடாதீர்கள் என்ற அறிவிப்பு பலகை ஒன்றையும் அவர் நிறுத்துகிறார்.** இது தான் கூரியின் செய்தியாக இருந்தது.

கூட்டம் முடிவடைந்து விட்டது. வந்த மக்கள் உள்ளம் தொடப்பட்டோராய் அமைதியாக அரங்கை விட்டு வெளியே சென்றனர். ஆனால் ஒரு மனிதன் அரங்கின் முன் பகுதியை நோக்கிய வண்ணம் வந்து கொண்டிருந்தான். கூரியின் அருகில் வந்துவிட்டான். நீலநிறச்சட்டை அணிந்த அந்த மனிதன் தன் தலையில் நீண்ட தொரு தொப்பி ஒன்றையும் அணிந்திருந்தான். அதில் ஒரு மண்டையோட்டின் படமும் அதற்கடியில் ஒன்றுக்கொன்று குறுக்காக இரண்டு எலும்புகளும் வரையப்பட்டிருந்தன. அந்த மனிதன் யாரென்று கூரிக்குத் தெரிந்து விட்டது. ஆம், அவன் ரேவன்ஸ் பிரக்கில் பணியாற்றிய போர் வீரன்.

கூரியின் அருகாமையில் வந்த அந்தப் போர் வீரன் தனது கரத்தை நீட்டினான். நல்ல செய்தி அம்மையாரே! நீங்கள் சொன்னபடி நம்முடைய பாவங்கள் அனைத்தும் ஆழ்கடலில் மூழ்கிவிட்டன. இதை அறியும் போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது என்று அவன் கூறினான். சித்ரவதைக் கூடத்தில் நடந்த கொடுமைகள் கூரியின் கண்முன் தொடர்படங்களாகக்காட்சியளித்தன. அவருடைய இரத்தம் கொதித்தது.

நீங்கள் ரேவன்ஸ்பிரக்கைப் பற்றிப் பேசினீர்கள். அங்கே நான் போர் வீரனாகப் பணிபுரிந்தேன். அங்கே பல கொடுமைகள் புரிந்தேன். ஆனால் அந்தநாட்களில்தான் நான் இரட்சிக்கப்பட்டேன். இப்பொழுது ஒரு கிறிஸ்தவனாகவாழ்கின்றேன். நான் செய்த கொடுமைகள் அனைத்தையும் தேவன் மன்னித்து விட்டார் என்பதை அறிவேன். ஆனால் உங்கள் வாயிலிருந்து அந்த மன்னிப்பின் வார்த்தைகளைக் கேட்க விரும்புகின்றேன். நீங்கள் என்னை மன்னிப்பீர்களா? என்று தொடர்ந்து வினவினான் அந்தப் போர் வீரன்.

இந்த மனிதனையா மன்னிப்பது? கூரியின் உள்ளத்தில் கசப்பு பெருக்கெடுத்து ஓடியது. இவர்களல்லவா யூதர்களுக்குத் துரோகிகளாக விளங்கினர். எத்தனை கொடுமைகள் புரிந்தனர். இரக்கமற்ற காட்டுமிராண்டிகள், என்னுடைய குடும்பம் இவர்களால் அழிந்து போயிற்று. இரைப்பையில் ஊறிய கசப்பு நீர் அமிலம் போலக் கொதித்தது.

கூரிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மலைத்துப்போய் நின்றுவிட்டார். பல மணி நேரம் கடந்தது போலத் தோன்றிற்று. ஆனால் ஒரு சில வினாடிகள் தான் அந்த நிலைமை தொடர்ந்தது. கூரி பதில் சொல்லத்தொடங்கினார். தனது மேலங்கியின் பையிலிருந்து கரத்தை வெளியே எடுத்தார். எதிரே நின்ற மனிதனின் கரத்தைப் பிடித்துக் கை குலுக்கினார். **சகோதரனே, தேவன் உம்மை மன்னித்த பிறகு, நான் எப்படி உம்மை மன்னிக்காமல் இருக்க முடியும்? இதய பூர்வமாக நான் உம்மை மன்னிக்கிறேன்** என்று கூறினார்.

முன்னாள் சிறைக் கைதியும், சிறைக் காவலனும் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டனர். எவ்வளவு நேரம் சென்றது என்று தெரியவில்லை. இப்பொழுது இருவரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாகிவிட்டனர். **அன்பின் நண்பரே! சத்துருக்களை நேசிக்கும் அன்பு இழந்து போய் வாழும் எம் தேசத்தில் சத்துருக்களை நேசித்து சத்தியத்தினால் அன்பு கூர்ந்திடும் ஓர் அன்பு வெளிப்படுத்தும் ஓர் அணியில் நீ அங்கமாய் மாறவருவாயா? தேவன் தாமே உன்னை ஆசீர்வதிப்பாராக.**




## போராட்டத்திற்கான காரணங்கள்

இராஜாக்கள் யுத்தம் செய்யப்போக நான்கு காரணங்கள் உண்டு.

I. *கொள்ளைகளை சேகரிக்க.*
II. *பழிவாங்க.*
III. *பிரதேசங்களின் மேல் உள்ள ஆசை.*
IV. *மகிமை கனம்.*

## 1. கொள்ளைகளைச் சேகரிக்க (1நாளாகமம் 20:1–2)

யோவாப் கொள்ளைகளை தாவீதிடம் கொடுத்தான். **இதே வண்ணம ஆவிக்குரிய போராட்டத்திலும் கொள்ளைகள் உண்டு. (மத்தேயு 12:29)**

### பலவான் – பிசாசு

பிசாசின் இராஜ்ஜியத்தில் விலையேறப்பெற்ற கற்களாகிய உடமைகள் அடிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. **ஒவ்வொரு ஆத்துமாவும் விலையேறப்பெற்ற கற்களே ஆகும்.** நாம் பலவானை கட்டினால் அவன் வீட்டைக் கொள்ளையிடலாம். **போராட்டமின்றி கொள்ளைகளை அனுபவிக்க முடியாது. எனவே பிசாசை மேற்கொண்டு கொள்ளைகளை இயேசுவிடம் ஒப்படைப்போம்.**

## 2. பழிவாங்க

இராஜாக்கள் பழிவாங்கவும் யுத்தத்திற்கு செல்வர். **அமலேக்கியரை முறிய அடிக்கும்படி சவுல் தேவனால் கட்டளை பெற்றான்.** ஏன் இஸ்ரவேல் போராட வந்ததற்கு பழிவாங்கலாகும். **யாத்திராகமம் 17ம் அதிகாரத்தில் இந்தச் சம்பவம் உள்ளது. (யாத்திராகமம் 17:14)** இஸ்ரவேல் அமலேக்கியருக்கு எந்த தீங்கும் செய்யவில்லை. **ஆனால் இஸ்ரவேலை அழிக்க அவர்கள் முற்பட்டார்கள்**

இதே வண்ணம் பிசாசும் மனித குலத்தை அழிக்க முற்படுகிறான். **ஏதேனில் சாத்தான் மனிதனை தாக்கிய அந்த செயலை தேவன் மறக்கவில்லை.** எனவே சாத்தான் மேலும் அவன் இராஜ்ஜியத்தின் மேலும் பழிவாங்க சபையை எழுப்பினார். **இதை நிறைவேற்றுமட்டும் நாம் ஓய்ந்து போகக்கூடாது.**

பழிவாங்கலை புரிந்து கொள்ளத் தவறினான் சவுல். **அது அவனை தேவனுக்கு கீழ்ப்படியாதவாறு வழி நடத்தியது.**

## 3. பிரதேசங்களின் மேல் உள்ள ஆசை

இராஜாக்கள் தங்கள் இராஜ்யத்தை விஸ்தரிக்க யுத்தத்திற்கு போவார்கள். **இயேசுவுக்கும் இந்த ஆசையுள்ளது.** இயேசுவின் சுதந்தரத்தின் ஒரு பங்கு இப்போ எதிரியின் சேனையின் வசம் உள்ளது. **எவ்விதம் வாக்குக் கொடுத்த தேசத்தை இஸ்ரவேலர் சுதந்தரித்தார்களோ** அவ்விதம் இயேசுவுக்குப் பிதாவினால் வாக்குக் கொடுக்கப்பட்டதை சபை சுதந்தரிக்க வேண்டும். (சங்கீதம் 2:7-8. அப்போஸ்தலர் 1:8)

## 4. மகிமை & கனம்

1சாமுவேல் 17:26 இஸ்ரவேல் மீது வந்த நிந்தையை அகற்றுவதில் கோலியாத்தின் மேல் பெற்ற வெற்றியை இணைத்தான் தாவீது. **கோலியாத் ஜீவனுள்ள தேவனின் சேனையை நிந்திப்பதை தாவீது விரும்பவில்லை. தேவனின் கனம் அங்கு ஆட்டம் கண்டது.**

தாவீது பெலிஸ்தனுக்கும் உலகத்திற்கும் இஸ்ரவேலில் தேவன் இருக்கிறார் என நிருபித்தான். **போராட்டமானது இயேசுவின் நாமம் இழந்த மகிமையையும் கனத்தையும்** திரும்ப பெறத்தேவையானது.

தொடரும்.....

(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் இன்பரூபன்)

## விடைவிடை - 40 சரியான விடை எழுதியவர்கள்

01. தி.ஜெகா - மயிலங்காடு
02.ரி.சிவாஜினி - காரைநகர்
03. உ.ராஜ்குமார் - காரைநகர்
04. ச.நாகேஸ்வரி - காரைநகர்
05. கு.ஜான்சி - நாவற்குழி
06. பா.டிலானி - காரைநகர்
07. பா.மோகனதாஸ் - காரைநகர்
08. பா.வதனி - காரைநகர்
09. பா.கோமதி - காரைநகர்
10. தே.குமுதினி - பாண்டவெட்டை
11. ந.தயாழினி - காரைநகர்
12. ரி.சுஜீவன் - காரைநகர்
13. ம.டயானி - பாண்டவெட்டை
14. லோரன்ஸ் நெகேமியா - நாவற்குழி

# வித்திடும் வித்தகர்கள்

## ஹட்சன் டெய்லர்

தொடர்ச்சி...

## மற்றுமோர் மிஷன்

ஒரு வாரத்துக்குப்பின் 'ஹட்சன் தான் நேசித்த தங்கை திருமதி அமலியாவின் வீட்டிற்கு வந்தார். ஞாயிறன்று ஆராதனையில் பங்கெடுக்க தேவன் எங்கே நடத்துவாரோ அங்கே தான் செல்ல வேண்டுமென்பது அன்று அவருடைய ஜெபம். பின்னர் நடத்துதலின்படி வெல்பெக் தெருவிலுள்ள சிறிய ஜெபக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டார்.



ஜெபமுடிவில் எல்லாரும் ஜெப விண்ணப்பங்களைக் கொடுத்தனர். 'ஹட்சனும் நினைக்கப்படாத சீன மக்களின் தேவைக்காய் ஜெபிக்க விண்ணப்பம் கொடுத்து, அதற்காக ஜெபித்தார். அந்த ஜெபம் அக் கூட்டத்திலிருந்த அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மாதுவை ஊக்குவித்தது.

இம் மாது 'ஹட்சனைப் போர்ட்லாந்திலுள்ள தனது மாளிகைக்கு அழைத்துச் சென்று உபசரித்தார்கள். பின்னர் சீன ஊழியத்திற்குப் பெருமளவில் உடந்தையாயிருந்தார்கள்.



எங்கும் கதவுகள் திறந்துவிடப்பட்டுக் கொண்டிருந்தன. நான்கு குழந்தைகளுக்கு தாயான மரியா முப்பது வயது நிரம்புமுன், இப் புதிய சீன உள்நாட்டு மிஷனுக்கும் தாயாக தன்னை ஒப்புவித்தாள்.

பதினொரு சீன மாநிலங்களில் பணியாற்ற 24 ஐரோப்பிய மிஷனெரிகளும், 24சீன மிஷனெரிகளும் தேவைப்பட்டனர். பாப்டிஸ்டு பத்திரிகையில் சீனத்தேவைகள் மிகுந்த ஜெபத்துடன் இடம்பெற்றன. சாதாரணமான எழுத்துக்களல்ல—அவை மக்கள் மனதை இழுக்கும் எழுத்துக்கள்.

"சீனாவுக்கு மிஷனெரியாகச் செல்லுபவர்கள் தேவனை மட்டும் சார்ந்திருக்க வேண்டும்". இந்த துணிச்சலான சவாலை ஏற்றுக்கொள்ளுவோர் மட்டும் வந்தால் போதும். "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் கூடக் கொடுக்கப்படும்" என்ற தேவனின் வார்த்தையை நம்புகிறவர்களும், அவர் வழியில் நடக்க விருப்பமுள்ளவர்களும் மட்டும் சென்றால் போதும். தேவன் தான் இந்த உலக பொன்னுக்கும் வெள்ளிக்கும் உரிமையாளர். அவரே சகல வற்றையும் படைத்தவர். அவருக்குத் தன் பிள்ளைகளைக் காகங்களைக் கொண்டு போஷிக்கத் தெரியும்.



இஸ்ரவேல் ஜனங்களை நாற்பது வருடமாக ஆச்சரியமாய்ப் போஷிக்க அறிந்தவர் உன்னை மட்டும் கைவிட்டுவிடுவாரோ? எல்லாம் அவரால் கூடும். நாம் அவர் வழிகளில் நடந்து அவரை மகிமைப்படுத்துவோம். அவர் ஒரு நாளும் நம் தேவைகளைச் சந்திக்கத்தவறமாட்டார். என்று 'ஹட்சன் ஆணித்தரமாய் சவால்விட்டு எழுதினார்.

விசுவாசமுள்ள ஆண்களையும் பெண்களையுமே அவர் சீன உள்நாட்டு மிஷனின் மிஷனெரிகளாய் அழைக்கவியழைத்தார்.

இந்தப் புதிய மிஷன் வேதனையான அனுபவங்களினூடே வளர்ந்தது. முற்றிலும் தேவனையே சார்ந்திருந்தது அந்த மிஷன். அவர் தகுதியுள்ள பிள்ளைகளை எழுப்பி அனுப்புவார் என்பதே 'ஹட்சனின் நம்பிக்கை.

இவ் வேளையில் மரியா மிகுந்த நோயுற்று மரணத்தோடு போராடிக்கொண்டிருந்தார்கள். அறுவை சிகிச்சை செய்த பின் மீண்டால் ஒரு வேளை வாழ்வுண்டு என்ற துக்கமான நிலையிலகப்பட்டார்கள். எனினும் தேவனின் மிகுந்த கிருபையினால் மூன்று வாரங்களுக்குப் பின் சுகம் கிடைத்தது.

தொடரும்.......

## வினாவிடை - 40
## சரியான பதில்கள்

01. எப்பிராயீமில் தங்கியிருந்த லேவியன் (நியா 19:18)
02. கோரேஸ்ராஜா (எஸ்றா 5:15)
03. அபிசாய் (2சாமு 23:18-19)
04. மீகாவின் மகன் மத்தனியா (நெகே 11:17)
05. பவுல் (2கொரி 13:7)
06. ஆபிரகாம் (யாத்திராகமம் 2:23)
07. 1சாமுவேல் 25:6-1நாளாகமம் 12:18
08. அத்சாள் (எஸ்தர் 2:7)
09. தேர்தியு (ரோமர் 16:22)
10. லாசரு (லூக்கா 16:21)

# ஒருவரி முத்துக்கள்

விண்ணப்பங்கள்
விடையாவது ஜெப
நேரக் கண்ணீரிலே

பொய்களின் அரண்களால்
மூடப்படாதது
உண்மை

ஆவிக்குரிய அலங்கார
அறை
ஜெப அறை

உயிரில் உறைந்த
ஆவிக்குரிய வேலை
ஆராதனை

முடியாத சோகங்கள்
முடிவது
சிலுவை அன்பிலே

மறைவினிலும்
மறையாதது தேவ
பிரசன்னம்

மரணங்களைச் சந்தித்தாலும்
மடியாதது
ஊழியம்

உடைவுகளைத்
தடுப்பது
உறவு

உலர்ந்த எலும்புகளையும்
உயிரடைய வைப்பது
உன்னத தீர்க்கதரிசனம்

ஆழத்தில் கிரியை
செய்யவல்லது
அன்பு

# தேவனுடனான உறவுக்கான அனலின் அழைப்பு...



## மணவாளனைச் சந்திக்கச் செல்லும் மணவாட்டி

...பாழுது பர லோக ...டிகளைப் பிடித்துக் ...: மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். உங்களையும் என்னையும் தன்னுடைய மணவாட்டியாக்கும் படியாய இயேசு எங்களுக்காய் சீதனம் கொடுத்தார். **ஏதை எங்களுக்காக சீதனமாய் கொடுத்தார்? அவர் தன்னுடைய ஜீவனையே கொடுத்தார். தன்னுடைய குற்ற மற்ற பரிசுத்த இரத்தத்தைக் கொடுத்தார்.** எங்களை கறை, திறை, பிழையற்ற பரிசுத்த மணவாட்டிகளாய் மாற்றும் படிக்கு அவர் எங்களுக்காக தன்னையே ஒப்புக் கொடுத்தார்.

**இயேசுவை நாங்கள் சந்திக்கின்ற ஒரு நிலை உண்டு. மணவாளன் மணவாட்டியைச் சந்திக்கின்ற நிலை.** அது மிக சீக்கிரமாய் நடக்கப்போகின்றது. ஆகவே பரிசுத்தமாய், கறை, திறை, பிழையற்றவர்களாய்இருக்கின்றஒவ்வொரு தேவனுடைய பிள்ளைகளையும் இயேசு இரகசிய வருகையிலே அவரைச் சந்திக்கும் படியாய் எடுத்துக்கொள்வார். ஆகவே இதைக் குறித்த காரியங்களை ஒரு கிறிஸ்தவ திருமண ஆராதனையில் நடக்கும் காரியங்களோடு ஒப்பிட்டு, ஆராதனையின் படிநிலைகளுக் கூடாய் நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

மணமகன் வந்து முன்பாக இருப்பார். அவருடைய தோழர்களும் அவரோடு கூட இருப்பார்கள். அதன் பிற்பாடு குறிப்பிட்ட நேரம் வருகின்ற போது மணமகள் வாசலிலே வந்து நிற்பாள். ஆராதனை ஆராம்பிக்கும் நேரத்திலே மணவாட்டி மெது மெதுவாக நடந்து மணவாளனுக்கு அருகே வருவாள். இதற்கு முன்பதாக அநேக காரியங்கள் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கும்.

### மணவாளனைச் சந்திக்கப் போகிற மணவாட்டி ஆயத்தப்பட்டவளாய் இருப்பாள்

மணவாளனைச் சந்திக்கச் செல்லும் மணவாட்டி சகல ஆயத்தங்களையும் முன்கூட்டியே செய்திருக்க வேண்டும். எந்தப் பாவங்களை விட வேண்டுமோ அவைகளையெல்லாம் விட்டுவிட வேண்டும். யாரோடு ஒப்புர

வாக வேண்டுமோ அவர்களோடெல் லாம் ஒப்புரவாக வேண்டும். எல்லா விடயத்திலும் பரிசுத்தமான கறை, திறை, பிழையற்ற அந்த ஆயத்த நிலையோடும், ஒரு முதிர்ச்சியின் நிலையிலும் மணவாட்டி இருக்க வேண்டும். அவ்வாறான நிலையில் இருந்தால் மாத்திரமே மணவாளனைச் சந்திக்க முடியும்.

ஆண்டவர் சொன்னார் **மத்தேயு 25:13 மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்.** விழித்திருப்பது தான் அந்த ஆயத்த நிலை. பரிசுத்த வாழ்க்கையை தொடர்ந்து வாழுகின்ற நிலை. பாவத்தை தொடர்ந்து வெறுக்கின்ற நிலை. ஆண்டவருடைய் முகத்தை தரிசிக்க எந்தக் கணத்திலும் ஆயத்தமாய் இருக்கின்ற அந்த நிலை. இதைத் தான் முதலாவதாக மணவாட்டிகளாகிய நாங்கள் செய்ய வேண்டும். சத்துருவை எதிர்க்க வேண்டிய நிலையிலே சத்துருவை எதிர்க்கிற ஆயத்த நிலையிலே நாங்கள் இருக்க வேண்டும். பாவத்தை விட்டு ஓடவேண்டிய நேரத்திலே பாவத்தைவிட்டு ஓடுகின்ற அந்த ஆயத்த நிலையிலே நாங்கள் இருக்க வேண்டும். இவையெல்லாம் மணவாளனுடைய வருகைக்கு எங்களை ஆயத்தப படுத்துகின்ற ஆயத்தங்கள்.



தாவீது கோலியாத்தை எதிர்க்கின்ற அந்த ஆயத்த நிலையிலே இருந்தான். **இயேசு கிறிஸ்து ஏற்ற வேளையிலே வேண்டி யோர்க்குச் சுகத்தையும், விடுதலையையும் கொடுக்க ஆயத்தமாய் இருந்தார்.** எங்களுடைய வாழ்க்கையிலே எப்பொழுதும் ஆண்டவருக்காய் காரியம் செய்ய, ஆண்டவருடைய வசனத்தின்படி வாழ, அவருடைய வசனத்திற்கு எங்களை அர்ப்பணிக்க ஆயத்த நிலையிலே இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஆயத்தத்தோடு உண்மையுள்ளவர்களாய் இருக்கிறவர்கள் மணவாளனுடைய வருகைக்கு தங்களை ஆயத்தமாய் வைத்திருக்கிறார்கள். **நாங்கள் ஆயத்தமாய் இருக்கின்றோமா?** இயேசு இன்று வருவாராக இருந்தால் நாங்கள் என்ன செய்வோம்?

உதாரணமாக, திருமணத்திற்காக மணவாளன் ஆலயத்திற்கு வந்து முன்பாக அமர்ந்திருக்கின்றார். மணவாட்டி என்ன செய்கின்றார், அவர் ஒருவரை மணவாளனிடத்தில் அனுப்பி இன்றைக்கு எனக்கு நேரமில்லை, வேறொரு நாள் நான் வருகின்றேன் என்று கூறுவாளாக இருந்தால் நான் நினைக்கின்றேன் அந்த மணவாளன் அந்த மணவாட்டியை அதற்குப் பிற்பாடு ஒரு நாளும் திருமணம் செய்து கொள்ள மாட்டான். இயேசு வருகின்ற போது நாங்கள் ஆயத்தமில்லாதவர்களாய் இருந்தால் நாங்கள் கைவிடப்பட்டு விடுவோம். பிரியமானவர்களே நாங்கள் ஆயத்தம் உள்ள அந்த நிலையிலே இருந்தால்தான் ஆண்டவரை சந்திக்க முடியும்.

சிலவேளை நீங்கள் வியாதிப்படுக்கையில் இருந்தாலும் ஆண்டவரோடு பேசிக்கொண்டிருங்கள். ஆண்டவரே நீர் எப்போது வருவீர்? நான் உம்முடைய முகத்தைக் காண வேண்டும். ஆண்டவரே என் குறை குற்றங்களை, பாவங்களை மன்னியும். என்று கேட்க வேண்டும." **பாவ**

**மன்னிப்பின் மகிழ்ச்சியோடு எப்போதும் இருப்புவர்கள் ஆயத்த முள்ளவர்கள். ஒரு பாவம் உங்கள் வாழ்க்கையை அணுகுகின்ற போது அதைக குறித்த குற்ற உணர்வு உங்களை நெருக்கி ஏவி அதற்காக மனஸ்தாபப்பட்டு மன்னிப்பு கேட்கின்ற மனநிலை இருந்தால் நீங்கள் ஆயத்தமுள்ளவர்கள்.**

**மணவாட்டி ஒரு விஷேசித்த வஸ்திரம் தரித்துக்கொண்டு வருவாள்.**



அந்த வஸ்திரம் தூய வெண்மை நிறமுடையதாய் இருக்கும். அது விஷேசித்த ஒரு வஸ்திரம். அந்த வஸ்திரத்தை எல்லா நேரமும் அணிய மாட்டார்கள். மணவாட்டி மணவாளனை சந்திக்கின்ற நேரம் வஸ்திரம் இல்லாமல் சந்திக்க முடியாது. நாங்கள் வேதாகமத்திலே பார்க்கின்ற போது ஒரு கலியாண விருந்திற்கு கலியாண வஸ்திரம் இல்லாமல் ஒருவன் போயிருந்தான். இவ்விதம் அவன் வந்திருப்பது கண்டு பிடிக்கப் பட்ட போது என்ன நடந்தது? அவனுக்கு தண்டனையாக உபாதிக்கிறவர்களுடைய கரத்திலே ஒப்புக்கொடுக்கப் பட்டான். ஏன் அவன் ஏழைதானே. ஆகவே இந்த வஸ்திரம் இல்லாது இருக்க முடியாதா? அந்த நாட்களிலே இஸ்ரவேல் தேசத்திலே திருமண நிகழ்வாக இருந்தால் அந்த திருமண வீட்டு வாசலில் வைத்து திருமணத்திற்குரிய ஆடையை அவர்கள் இலவசமாக கொடுப்பார்கள். அதைப் பெற்றுக் கொண்டு தான் திருமண பந்தியில் கலந்து கொள்ள வேண்டும். ஆனால் இவன் வஸ்திரம் இல்லாமல் மறைவான வழியிலே அந்த திருமணத்திற்கு வந்துவிட்டான். கண்டுபிடிக்கப் பட்டபோது தண்டனை வழங்கப் பட்டது.

நாங்கள் எல்லோரும் **இரட்சிக்கப்படும்படியாய் இயேசு கிறிஸ்து கிருபையாய் அந்த இரட்சிப்பின் வஸ்திரத்தைக் கொடுக்க ஆயத்தமாய் இருக்கின்றார்.** எனவே இந்தக் கிருபையின் நாட்களிலே இரட்சிப்பின் வஸ்திரத்தை நாங்கள் யாராவது அணியாமல் எல்லோரோடும் சேர்ந்து கிறிஸ்தவ ஓட்டம் ஓடுகின்றோம் என்று ஓடினால், ஒரு நாள் எங்களுக்குத் தண்டனை கிடைக்கும். நாங்கள் மணவாளனோடு அவருடைய சந்தோசத்திற்குள் பிரவேசிக்க முடியாது. எல்லாருக்கும் இரட்சிப்பின் வஸ்திரம் இருக்க வேண்டும். இங்கே சாதாரண திருமணத்திற்கு இப்படியான காரியங்கள் என்றால் பரம மணவாளனைச் சந்திக்க வேண்டிய நாங்கள் எப்படி ஆயத்தப்பட வேண்டும். அவர் கிரயம் கொடுத்து அந்த வஸ்திரத்தை தந்திருக்கின்றார். தன்னுடைய இரத்தத்தினாலே அந்த வஸ்திரத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்.

தேவஜனமே இந்த கிருபையின் நாட்களில் அவர் கொடுக்கும் இரட்சிப்பின் வஸ்திரத்தை வாங்கிப் போட தவறுவோமாக இருந்தால் நித்திய அழிவிலே கடினமாய் நரகத்திலே வேதனைப்பட வேண்டி இருக்கும். நீங்கள் இரட்சிக்கப்பட்டும் இன்னும் இரட்சிப்பின் வஸ்திரம் இல்லாமல் இருக்கின்றீர்களா? இரட்சிப்பின் வஸ்திரத்தை போடுங்கள். இரட்சிப்பிலே நிலைத் திருங்கள். **பாவம்**

**செய்கின்ற போது நாங்கள் அந்த இரட்சிப்பின் வஸ் திரத்தை இழந்து போகின்றோம்.** எனவே சிந்தித்துப் பாருங்கள். இப் பொழுது நீங்கள் அந்த இரட்சிப்பின் வஸ்திரத்தோடு இருக் கின்றீர்களா?. மணவாட்டி விஷேசித்த வஸ்திரம் தரித்தவளாக மணவா ளனை நோக்கி வருவாள். மணவாள னாகிய இயேசு கிறிஸ்துவை நோக் கிப் போகின்ற நீங்களும் நானும் இரட் சிப்பின் வஸ்திரத்தோடு போவோம்.

**மணவாட்டி மணவாளனை சந்திக்கின்ற அந்த நேரத்திலே மெது மெதுவாய் நடந்து வருவாள்.**



திருமண ஆராதனையின் போது மண வாட்டியின் நடை ஒரு ஒழுங்குப டுத்தப்பட்ட, ஒரு கட்டுப் பாட்டுக்கு உட்பட்ட நடையாக இருக்கும். மணவாட்டிகளாகிய நீங்க ளும் நானும் கிறிஸ்துவுக்கும், தேவனு டைய சபைக்கும், தேவன் தந்த ஊழியர்களுக்கும் கட்டுப்பட்டவர் களாய் நடந்தால் மணவாளனுக்கு அருகிலே வருகின்றோம். நாம் இந்த உலகத்திற்கு ஒத்த நடை நடக்க முடியாது. உலகத்தார் போல நாங் கள் யாருமே காரியங்க ளைச் செய்ய முடியாது. உலகத்தோடு ஒத்த வேசம் போட முடியாது. மணவாட்டியென்றால் அவளுடைய நடை வித்தியாசமானது. நீங்கள் தேவனுடைய விருப்பத்தின் படி கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு வர வேண்டும்.

திருமண ஆராதனைகளின் போது பாடல் ஒன்று பாடுவார்கள். (ஏதேனின் விவாகத்தில் தேவன் சொன்ன வாக்கு....(வேறு பாடல்களும் பாடப்படலாம்)) இந்தப் பாடல் பாடத்தொடங்கி முடியும் போது மணவாட்டி மணவாளனுக்கு அருகில் வந்து நிற்பாள். கிறிஸ்தவ நடை ஒரு ஒழுங்குள்ள நடை, அது கட்டுப்பாடுள்ள நடை, அது வித்தியா சமான நடை, கிறிஸ்து விரும்புகின்ற நடை. அது தான் மணவாட்டியினு டைய நடை. நாங்கள் எப்படி இது வரைக்கும் கிறிஸ்தவ வாழ்க்கையில் நடந்திருக் கின்றோம்? உலகத்திற்கு ஒத்த வேஷம் போட்டு நடக்கின் றோமா? அநீதியோடு சேர்ந்து நடக்கின் றோமா? சத்துருவோடு சத்துருவின் கிரியைகளோடு இணைந்து நடக்கின் றோமா? அப்படியென்றால் நாங்கள் ஒரு போதும் கிறிஸ்துவின் மணவாட் டிகள் இல்லை.

பிரியமானவர்களே சில வேளைகளில் நாங்கள் இதுவரை தவறியிருந்தால் இன்றைக்கு எங்களு டைய பரம மணவாளனை சந்திப் பதற்காக எங்களுடைய நடைகளை மாற்றுவோம். கட்டுப்பட்டு இருப்போம், அடங்கி இருப்போம், சொல்வதனைக் கேட்போம். இயேசு வருகிறார். போவ தற்கு எத்தனை பேர் ஆயத்தம்? அப்படியென்றால் உங்களுடைய நடை கட்டுப்படுத்தப்பட்ட நடையாக இருக்கட்டும். நாங்கள் சத்துருவோடு சேர்ந்து நடக்க முடியாது, ஏனென்றால் நாங்கள் மணவாட்டிகள். நாங்கள் நீதிக்கு புறம்பாக நடக்க முடியாது. அந்நிய நுகத்திலே நாங்கள் இணைக் கப்பட முடியாது. இருளிலே நாங்கள் நடக்க முடியாது. ஏனென்றால நாங்கள் இயேசு கிறிஸ்துவினுடைய மண வாட்டிகள். தேவன் நேசித்து தன்னு

டைய சொந்த இரத்தத்தினாலே எங்களை மீட்டிருக்கிற படியினால் நாங்கள் சொல்லுவோம்: ஆண்டவரே நீர் மாத்திரமே என்னுடைய தேவன். நீர் மாத்திரமே என்னுடைய மணவாளன். இதைவிட வேறு எங்கும் நான் திரும்ப மாட்டேன். உம்மை மறந்து வேறு எங்கும் நான் ஓடமாட்டேன். நாங்கள் உலகத்தைவிட்டு, பாவத்தைவிட்டு தேவனுக்குப் பிரியமில்லாத வாழ்க்கையை விட்டுப் பிரிந்திருக்கின்ற போது அந்த மணவாளன் எங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

11கொரிந்தியர் 6:14-18 அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக. நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடன் விசுவாசிக்கு பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு பிரிந்து போய் அசுத்தமானவைகளைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்போது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு உங்களுக்குப் பிதாவாயிருப்பேன். நீங்கள் எனக்கு குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார். உங்களை ஆண்டவர் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? இவை எல்லாவற்றையும் விட்டு நீங்கள் பிரிந்திருக்க வேண்டும்.

யாக்கோபு 4:4 விபசாரரே, **விபசாரிகளே உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா?** ஆகையால் உலகத்திற்கு சிநேகிதராயிருக்க விரும்புகிறவன் தேவனுக்கு பகைஞனாகின்றான். நாங்கள் இரட்சிக்கப் பட்டதன் பிற்பாடு இயேசுவை மறந்து போவோமாக இருந்தால் நாங்கள் விபசாரரும், விபசாரிகளுமாய் மாறி விடுகின்றோம். நீங்கள் இரட்சிக்கப் பட்டு, தேவனுடைய அழைப்பைப் பெற்று தேவனுடைய பிள்ளை என்று தேவன் உங்களை தெரிந்து கொண்ட பிற்பாடு நீங்கள் அவரை மறந்து உலகத்தோடு சேர்ந்து இருக்கின்றீர்களா? **உலகத்திற்கும், தேவனுக்கும் தொடர்பில்லை. இருளுக்கும் வெளிச் சத்திற்கும் தொடர்பில்லை. விசுவாசிக்கும் அவிசுவாசிக்கும் பிணைப்பில்லை.** ஆண்டவர் உங்களை இரட்சித்ததான நாள் முதல் இன்றைய நாள் வரைக்கும் நீங்கள் நடந்து வந்துவிட்டீர்கள். இன்றைய நாள் வரைக்கும் உங்கள் நடை எப்படி இருந்தது. நாங்கள் தொடர்ந்தும் நடந்து கொண்டிருக்கின் றோம். கட்டுப்பட்ட நடையா?, அதிகாரத்திற்குட் பட்ட நடையா? பரிசுத்தமான நடையா? பாவத்தை வெறுத்து நடக்கின்றோமா? அப்படியென்றால் நல்லது. நாங்கள் எங்களுடைய மணவாளனுடைய முகத்தைக் காணப்போகின்றோம்.

**மணவாட்டி நடந்து வருகின்ற போது தோழிகளும் சேர்ந்து வருவார்கள்.**

மணவாட்டியின் தோழியர் மணவாட்டி நடக்கின்ற போது அவளுடைய கால்களுக்குள் எந்தத் தடைகளும் இல்லாதபடி பார்த்துக் கொள்ள வருவார்கள். **மணவாட்டி கோலத்தில் அவளுக்கு**



உதவி செய்ய ஆட்களை இருப்பார்கள் அந்த நேரத்தில் மணவாட்டியினுடையகரத்தில் இருப்பதனை வாங்குவதற்கு ஒருவர், மணவாட்டிக்கு தேவையானதைக் கொடுப்பதற்கு ஒருவர் என உதவி செய்து கொடுப்பர். **நீங்கள் மணவாட்டிகளாய் இருந்தால் தேவன் எந்த வழியில் ஆகிலும் இந்தப் புமியில் உங்கள் ஓட்டம் முடியும் வரைக்கும் உங்களுக்கு உதவி செய்ய ஆட்களை வைத்திருப்பார்.** அல்லது உங்களைத் தேறுவதற்கு தன்னுடைய தூதனைக் கூட அனுப்புவார்.

நீங்கள் மணவாட்டிகளானால் உங்களுக்கு உதவி செய்வதற்கு தூதர்கள் இருக்கிறார்கள். தேவதூதர்கள் உங்களுக்கு உதவி செய்கின்ற அந்தக் காரியத்தோடு இணைத்து காட்டுவதற்காக தேவனுடைய சித்தத்தையும, மணவாட்டியையும் இணைக்க விரும்புகின்றேன். மணவாட்டி என்றால் எப்பொழுதும் மணவாளனுடைய சித்தம் செய்பவள். தேவ சித்தத்தை, விருப்பத்தை மணவாட்டி நிறைவேற்ற வேண்டும். எங்களுடைய மணவாளன் இயேசு பிதாவினுடைய சித்தத்தை இயேசு எப்படிச் செய்தார் என்று சொல்வதற்கு தேவசித்தத்தை மணவாட்டியோடு இணைத்துச் சொல்லுகின்றேன். இயேசு பிதாவினுடைய சித்தத்தை ஒரு காரியத்திலும் தவறவிட வில்லை. சகல காரியத்திலும் பிதாவினுடைய சித்தம் செய்து கொண்டே வந்தார். கடைசியாக சிலுவையில் அவர் அறையப்படும் முன்பு கெத்சமெனே தோட்டத்தில் போய் ஜெபம் செய்கின்றார்.

**லூக்கா 22:44 அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரை யிலே விழுந்தது.** எங்களில் யாருக்காவது இப்படி வியர்வை வந்திருக்கின்றதா? இயேசு அவ்வளவாய் எங்களுக்காக வேதனைப்பட்டு பாடுகள் அனுப வித்துக் கொண்டிருக்கின்றார். அதே ஒரு பெரியபாடு. அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் விழுந்தது. எங்களுடைய பாவத்தின் கொடூரம் அவ்வளவாய் அவர் மீது தாக்கத்தைக் கொண்டு வந்தது. அவர் அந்த நேரத்திலேயே இரத்தம் சிந்தத் தொடங்கி விட்டார். அந்த நேரத்திலேயே அவர் எங்களுக்காய் வேதனையைச் சுமந்தார். அந் நேரத்திலே அவர் விண்ணப்பம் செய்தார்.

**லூக்கா 22:42 பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படி செய்யும்: ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்.** இயேசு பிதாவினுடைய சித்தத்தை தன்னுடைய மரண பரியந் தமும் செய்து எங்களுடைய பரம மணவாளனானார். நாங்கள் ஒவ்வொருவரும் அந்த மணவா ளனுடைய சித்தத்தை செய்து மணவாட்டிகளாய் இருப்போம். இயேசு எவ்வளவாய்பாடுகள்பட்டார். அவைகளின் மத்தியிலும் அவர் பிதாவின் சித்தம செய்தார். எங்களு டைய மணவாளனுடைய விருப்பத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றோம். இயேசுவின் விருப்பத்தை நாங்கள் எப்படி செய்கின்றோம். அவருடைய வார்த்தையை நாங்கள் ஆசையோடு நிறைவேற்றுகினறோமா? அவரது

விருப்பத்தை நிறைவேற்றுகிறவர்கள் தான் அவருடைய மணவாட்டிகள்.

**லூக்கா 22:43 அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்.** கெத்சமனே தோட்டத்தில்இயேசுவை அந்தத் தூதன் தேற்றினான். **தேவசித்தம் செய்கின்ற மணவாட்டிகளாகிய உங்களை இயேசு தேற்ற ஆயத்தமுள்ளவராய் இருக்கின்றார்.** எனவே எங்களை எல்லோரும் கைவிட்டுவிட்டார்களே என்று கலங்க வேண்டாம். *நீங்கள் ஆண்டவருடைய மணவாட்டி என்றால் நீங்கள் இந்தப் பூமியிலே உங்களுடைய ஓட்டத்தை முடிக்கும் வரைக்கும் உங்களுக்குரிய அத்தனை காரியங்களையும் செய்வதற்கு ஆண்டவர் யாரோ ஒருவரை உங்களுக்காக நியமித்திருப்பார். அல்லது தன்னுடைய தூதனை அனுப்பியாவது அவர் உங்களுக்கு உதவி செய்வார்.* எனவே சோர்ந்து போகாமல், கலங்காமல், தொடர்ந்து பரிசுத்தமுள்ள மணவாட்டிகளாய் நடந்து செல்லுங்கள்.

**மணவாட்டியின் தகப்பன் மணவாளனிடம் அவளைக் கொண்டு வந்து கொடுப்பார்.**

ஆதாமுக்கு ஏவாளைத் தேவன் கொண்டு போய் கொடுத்தார். சாதாரணமாக நடைபெறும் திருமணத்திலே தகப்பன் மகளைக் கொண்டு வந்து மணவாளனிடத்தில் கொடுப்பார். **ஆனால் அந்தப் பரம மணவாளனிடம் உங்களை நடத்திக் கொண்டு போகிறவர் உங்களுக்கு தேவன் கொடுத்த ஆவிக்குரிய தகப்பன். மணவாளனிடம் மணவாட்டியை ஒருவர் தான் கொண்டு சென்று கொடுக்க முடியும். இரண்டு தகப்பன்மார்கள் ஒரு நாளும் கொண்டு செல்ல** முடியாது. உங்கள் எல்லோருக்கும் ஒரு அருமையான போதகர் இருக்கின்றார். அவருடைய சத்தத்தை



கேட்டு அவர் சொல்லுகின்றபடி நீங்கள் செய்து பாருங்கள். மணவாளனிடம் போவீர்கள். இல்லையென்றால் எங்களால் பரலோகம் செல்ல முடியாது. பரம மணவாளன் இயேசு இந்தப் பூமியிலே எங்களை நடத்தும் படியாய் எங்களுக்கு நியமித்தவர் எங்களுடைய மேய்ப்பர். பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலோடு எம்மை நடத்திக் கொண்டு செல்பவர் அவர்தான். திருமண ஆராதனையின் ஒத்திகை வேளையில் மணவாட்டியை மெதுவாக நடக்கும்படி கூறும்போது உடனே மெதுவாக நடப்பாள். சற்று வேகமாக நடக்கும் படி கூறும் போது சற்று வேகமாக நடப்பாள். ஆனால் அவளது கண் எங்கே இருக்கும். அது மணவாளனை நோக்கியதாகவே இருக்கும். சொல்வதெல்லாம் செய்வார்கள். உங்களுக்கு சொல்லப்படுகிற எல்லாப் புத்திமதிகளையும் கேளுங்கள். மணவாளனை நோக்கிப் பாருங்கள். எங்களுடைய மணவாளனாகிய இயேசு கிறிஸ்துவை நோக்கிப்பார்த்த வண்ணம் எல்லாப் புத்திமதிகளையும் கேட்டு நடப்பதே மணவாட்டியினுடைய நடை.

**எபிரேயர் 13:17 உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி அவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்குங்கள். அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்**

குப் பிரஜோயமாயிருக்கமாட்டாதே. எனவே நீங்கள் எல்லோரும் அந்த சத்திய வார்த்தை களைக் கேட்டு, அவருடைய சத்தத்தைக் கேட்டு நடந்தால் நிச்சயமாய் நீங்கள் எல்லோரும் அந்தப் பரம மணவாள னிடம் போய்க் கொண்டிருக்கின்றீர்கள். **பரம மணவாளனுடைய கரங்களிலே கறை, திறை, பிழையற்றவர்களாய் உங்களையும் என்னையும் ஒப்படைக்கும் படியாக இந்த நாட்களிலே எங்களுக்கு கொடுக்கப்படுகின்ற எல்லா ஆலோசனை களையும் கேட்டு, எல்லாக் கண்டிப்புக் களையும் கேட்டு, எங்களுக்கு வருகின்ற எல்லாவிதமான அவருடைய சத்தத்தை யும் கேட்டு, வேதத்தின் வெளிச்சம் எமக்கு காண்பிக்கின்ற அந்தப் பாதையைக் கண்டு தொடர்ந்து நடந்து செல்வோமாக இருந் தால், நிச்சயமாய் எங்களுடைய பரம மண வாளனை நீங்களும், நானும் முகமுகமாய் காணுவோம், அவரைச் சந்திப்போம்.**

எங்கள் எல்லோரையும் ஆவிக் குரிய வழியிலே தேவனுடைய பயத் தோடு எங்களை நடத்தி வருகின்ற ஆவக்குரிய தகப்பனுக்கு கீழ்ப்படிவோம். பரம மணவாளனைச் சந்திப்போம். மண வாட்டி திருமணத்தின் போது சொல்லப் படுகின்ற சகல காரியங்களையும் செய்வாள். சொல்லப்படும் சகல காரியங்களையும் காது கொடுத்து கேட்பாள். ஏன்? மணவா ளனுக்கு அருகில் சென்று கொண்டிருப்ப தனால் சகலவற்றையும் சந்தோஷத் தோடே கேட்பாள். இது போலவே இங்கு உங்களுக்கு சொல்லப்படுகின்ற வார்த் தைகளை, ஆலோசனைகளை, கண்டிப்புக் களை சந்தோஷமாகக் கேட்டு இயேசுவை நோக்கி செல்லுங்கள். இதுவே செம்மை யான வழி, சரியான வழி. **மணவாளனை நீங்கள் சந்திக்க வேண்டுமா?**

**01. ஆயத்தமுள்ளவர்களாய் இருங்கள்.**

**02. இரட்சிப்பின் வஸ்திரம் தரித்திருங்கள்.**

**03. கிறிஸ்தவர்களுக்குரிய நடையில் நடவுங்கள்.**

**04. அப்படி நீங்கள் நடக்கும் போது தேவ தூதர்கள் உங்களுக்கு உதவி செய்வார் கள். ஆண்டவர் உங்கள் வாழ் நாள் எல்லாம் உங்களுக்கு உதவி செய்யும்படி யாய் யாரையாவது நியமித்து உங்களை அந்த வழியிலே நடத்திக் கொண்டு செல்லுவார்.**

**05. உங்களுடைய போதகருக்கு கீழ்ப் படிந்து, அவருடைய சத்தத்தைக் கேட்டு, அவர் காட்டுகின்ற வழியிலே நடந்து உங்களுடைய பரம மணவாளனை சந்தியுங்கள்.**

எங்களுடைய எதிர்பார்ப்பு எல்லாம் இயேசு எப்போது வருவார் என்பதாகவே இருக்க வேண்டும். எங்களுடைய மணவாளன் வருகின் றார். நாங்கள் மகிழ்ச்சியுடன் எதிர் கொண்டு போவோம். மணவாளனை சந்திப்பதற்காய் நீங்கள் இன்று வரைக் கும் நடந்து வந்து அந்தப் பாதையிலே சிலவேளை தவறியிருக்கலாம். சில வேளை ஆண்டவருடைய அன்பை மறந்து ஆண்டவருக்கு துரோகம் பண்ணி யிருக்கலாம், சபையினுடைய வார்த்தை யைக் கேட்காமல் எதிர்த்திருக்கலாம். ஆனாலும் இப்போது உங்களுக்கு அருமையான சந்தர்ப்பம், பரம மணவா ளன் இயேசுவை சந்திப்பதற்காக உங்களை தகுதியுள்ளவர்களாக் குங்கள்.

நீங்கள் தவறியிருந்தால் பாவ அறிக்கைக்குரிய சந்தர்ப்பம் உண்டு. எனவே ஆண்டவரே நான் தவறி இருக்கின்றேன். என்னுடைய இரட்சிப்பை அனேக வேளைகள் நான் குலைத் திருக்கின்றேன். ஆயத்தமில் லாமல் இருக்கின்றேன். ஆண்டவரே

உம்மை நான் நோகப்பண்ணியிருக்கின்றேன். உம்முடைய இரத்தத்திற்கு விரோதமாய் நான் காரியம் செய்திருக்கின்றேன். உம்முடைய இரத்தத்தை கால்களிற்கு கீழாக போட்டு மிதித்திருக்கின்றேன். நீர் உம்முடைய ஜீவனைக் கொடுத்து என்னை மீட்டுக் கொண்டதை நினைக்காமல் போனேனே. எனக்கு ஒரு மன்னிப்பு தாரும். உம்முடைய மணவாட்டியாய் என்னை ஏற்றுக்கொள்ளும் என்று கேட்டால் அவர் உங்களுக்கு ஒரு அற்புதம் செய்வார். நீங்கள் மறுபடியும் மணவாட்டி என்கிற ஸ்தானத்திலே ஆண்டவரை நோக்கி நடந்து செல்ல முடியும். அவருடைய வருகை மிக மிக சமீபமாய் இருக்கின்றது.



*வேதநாயகம் மகாராஜா*

## குறுக்கெழுத்துப் போட்டி – 38
## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. இவன்
02. செய்து
03. வார்த்தை
05. யோவான் ஸ்நான...

**மேலிருந்து கீழாக**

01. இயேசுவானவர்
02. செத்தனர்
04. இன்றைக்கு

**வலமிருந்து இடமாக**

09. குடும்பம்
07. வராதே (தேவரா)

**கீழிருந்து மேலாக**

06. ஸ்தேவான்
08. பல்
07. தேவன்

**ஒருவரை ஒருவர் நேசிக்கும்படி கர்த்தர் பரிசுத்தவான்களுக்கு கட்டளையிட்டுள்ளாரா? ஆம் என்றால் அதைச் செய்யுங்கள்.** - ஸ்பேர்ஜன்

## சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 130.00 Per Year |
| இந்தியா | S.L Rs 250.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 400.00 Per Year |
| மற்றைய எல்லா நாடுகளும் | S.L Rs 350.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

**சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்**

## சந்தா கூப்பன்

பெயர் :-..........................................................

விலாசம் :-..........................................................

..........................................................

..........................................................

..........................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

Zion Church Office,

No. 347, Navalar Road,

Jaffna, Srilanka.

To: ..................................







TO:

MISS. MATHANA GNANACHCHANDRAN,
ALVAI EAST,
ALVAI,
MADATHTHADY.